உ

# நீர்கொழும்பு
# ஸ்ரீ சிங்கமாகாளி
# திருப்பதிகம்

குடமுழுக்குத் திருநாள் வெளியீடு

பிரபவ பங்குனி 10

23.03.1988

உ

ஸ்ரீ சிங்கமாகாளி திருப்பதிகம்

பண்டிதர்   க. மயில்வாகனம்

குடமுழுக்குத் திருநாள் வெளியீடு

பிரபவ - பங்குனி 10

23.03.1988

உ

## வெளியீட்டுரை

பதிகம் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. அது பத்துச் செய்யுள்களான் இயன்றுவருவது. நீர்கொழும்பு அருள்மிகு சிங்கமாகாளி திருப்பதிகள்ம, அம்பாள் புனராவர்த்தன அஷ்படந்தனா மஹா கும்பாபிஷேக விழவின் போது வெளிவருகின்றது. இதனை, பண்டிதல். திரு. க. மயில்வாகனம் அவர்கள் ஆக்கியுதவினார்கள். பத்திரசம் ததும் இந்நூலை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். அன்பர்கள் படித்துப் பயன்பெற அன்னையின் திருவடிகளை ஏத்தி இறைஞ்சுகின்றோம்.

- வெளியீட்டாளர்

கு.வி. அச்சகம்

யாழ்ப்பாணம்.

23-03-1988

அம்பா சாம்பவி சந்த்ர மௌலி

அபலா அபர்ணா உமா பார்வதீ

காளீஹைமவதி சிவா த்ரியனா

காத்யாயனி பைரவீ

சாவித்திரீ நவயௌவனா சுபகரீ

சாம்ராஜ்ய லக்ஷ்மீ ப்ரதா

சித்ரூவி பரதேவதா பகவதீ

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி

ஆதி சங்கரர்

காப்பு

உலககெலம் பரந்தெழும் அஞ்ஞான இருளகல

ஒளிகூட்டு மணிமகுடமும்

உற்றொளிர் திலகமோ டருள்புரி விழிகளும்

உயர்ஞான வொண்மருப்பும்

இலகுமுயிர் மலவாதை மாற்றுமெய்க் கவரியும்

எழில்தரு பணிமணிகளும்

இலங்கிடப் பொன்னாடை வகீகியே நடநவில்

இபமா முகக்கடவுளே,

அலகில்பல் வளங்களும் வாய்ந்துயர் சென்மையின்

அழகுதவழ் நீர்கொழும்பூர்

அமர்ந்தருள் அம்பிகை ஆரணி நிருமலி

ஐயைமா காளிமீது

நிலவுசெஞ் சொன்மலர் கொண்டே நினைந்துருகி
நிகழ்த்துநற் பதிக மீது
நித்தலும் நின்றுலவி மாண்பயன் விளைக்கவே
நீயருள் கருணை முதலே.

நூல்

சீர்குரலவு பாராதி அண்டம் அனைத்தினுஞ்
செறிதரும் உயிரினங்கள்
சிறுமையின் நீங்கியே நாளெலாம் உய்யும்வகை
திருவுளத் தெண்ணி வைப்பாய்,
ஏர்குலவு மன்பினால் இன்னருள் முகிலாகி
எங்கணும் அருள்சு ரப்பாய்,
இன்பநலம் ஊட்டியே உவகையுடன் எவரையும்
என்றுமே ஓம்பி நிற்பாய்
தார்குலவு முக்கண்ணி, சாமுண்டி, சங்கரி,
சாலினி, திரிசூலியே
தாருகன் றனைவென்ற யோகினி, யாமளை,
சாம்பவி, அபிராமியே.
கார்குலவு ஆழிசூழ் நீர்கொழும் பதனிலே
காட்சிதரும் ஆர ணங்கே

காரண ீசௌந்தரீ காத்துநீ அருளுவாய்

கௌரிமா காளி உமையே.

(1)

காத்தருள் அன்னையே கருணைவிழி அமலையே

கருதருந் தெய்வமுதலே

காரிருட் குழாமென்ன உலகதை அலைத்திடும்

கயவனாம் தாரு கனைநீ

தீத்திறம் அகற்றியே ஆண்டருள் ஆடல்கொடு

சிவனவன் கண்ட மீதில்

திகழ்தருங் கடுவினில் தோய்ந்தவன் விழியினூடு

திக்குகள் அதிர வந்தாய்!

ஏத்தியே நீலியென் றேவரும் பரவவே

ஈசனார் ஆணை வழியே

ஏதிலன் ஆயவவ் வவுணனுக் கருளியே

எங்கணும் ஆகி நின்றாய்

கூத்தொடும் இயலிசை கொண்டமுத் தமிழ் பயில்

கோலமலி நீர்கொ ழும்பூர்

குலவுமுயர் தளிதனில் இருந்தருளி ஆடல்புரி

குமரிமா காளி உமையே.

(2)

மாகாள கண்டனொடு கூடியே ஐந்தொழில்

மகிழ்ந்துபரி மறைமு தல்வியே

மன்பதை அனைத்தையும் மாறாத கருணையால்

வாழ்விக்கு மாம ருந்தே

போகாத புயவலி பொருந்துமை மேனியன்

பொருதொழில் மகிடனையுநீ

புன்செயல் போக்கியே புத்தேளிர் வாழ்வுறப்

பொருந்துமின் னருள்சுரந்தாய்

பாகாதி தீஞ்சுவை வென்றபல் பாமாலை

பயிலுநின்செவிமீதிலே

பற்றிலா வன்கணேன் பழவடியன் கூறிடும்

பாடலும் ஏறுமன்றே.

வாகாக எக்கர்மிசை வான்திரைகள் நடமிடும்

வளமைசால் நீர்கொழும்பூர்

வாமையே சுந்தரீ அபிராம வல்லியே

வாலைமா காளி உமையே.

(3)

வாலறிவு பெற்றபேர் வந்தனை வழிபாடு

வைகலுஞ் செய்து நிற்ப

வல்வினைகள் மாற்றியே வானுலக போகங்கள்

வழங்கியே வைத்து தவுவாய்

நீலநன் மேனியன் சோதரீ யாமளை

நின்மலி சிவசொ ரூபி

நீடுமிவ் வுலகொடும் உயிரெலாம் நீயென

நிகழ்த்திடுஞ் சாத்தி ரங்கள்

சாலவுன் திருநாமஞ் சொல்லியென் புன்மையைச்

சற்றுமே நீக்க கில்லேன்

தமியனேன் வணீிலே ஏதிலார் குற்றங்கள்

சாற்றியே நிற்றல ழகோ

ஓலமிட்டலறியே அலைவந்து மோதிடும்

உததிசூழ் நீர்கொ ழும்பூர்

உற்றமர்ந் தருள்புரி திரிசூலி சாம்பவ ீ

ஓங்குமா காளி உமையே.

(4)

உற்றவர்கள் போலவே ஓயாமல் நயவுரை

உள்ளவை நனிபுகன்றே

உலகினில் உலுத்தர்கள் தங்கரும மாற்றுவார்

உண்மையிது புகழ்ச்சி இல்லை.

மற்றவர் பசப்புரை அறிந்துமே அறியாத

மனிதர்போற் பொறுத்த பேரை

வல்லதந் திறமையால் வஞ்சித்து விட்டதாய்

மகிழ்வுதான் கொள்வ ரந்தோ

பற்றிலேன் பண்பிலேன் அன்பனாய்ப் பாசாங்கு

பண்ணிடும் எற்கும் அருள்வாய்!

பகர்தரும் முக்குண வடிவாகி யுலகினைப்

படைத்தளித் தழிக்குமுதல்வி

செற்றமில் நெஞ்சினர் திருவிளங்கைநகர்

சேர்தரும் வணிக நல்லோர்

செய்தவப் பயனாகி நீர்கொழும் பூருளை

சிங்கமா காளி யுமையே.

(5)

செய்தவப் பயனுமிங் கிருந்தவா என்னென்பேன்

செகமதிற் சிறுமையேன்யான்

சிந்தையால் எண்ணவும் விழிகளால் காணவும்

செப்பவும் அரிய பொருளே

எய்தவரு குணங்குறி உருவுமுத லாயின

இகந்துமே நின்ற நீயும்

இதயமதில் வறீறிருந் துயிர்களைக் கணமெலாம்

இயக்குவித் தருள்சுரப்பாய்

துய்யதோர் மறைகளும் காணொணாத் தோகையே

துயர்கெடுத் தருள வேண்டும்

துதிபாடி மலர்தூவி விழிநீர் பெருக்கியுன்

துணையடி தொழுது நிற்பேன்

நெய்தலங் கானல் சூழ் நீர்கொழும் பதனிலே

நேயமொடு கோயில் கொண்டாய்

நின்மலி யோகினி திரிபுரை பைரவி

நீலிமா காளி யுமையே.

(6)

நின்மல சொரூபனாய் நீலமயில் மீதிலே

நின்றுவிளை யாடு முதல்வன்,

நீங்காத மெய்யன்பர் இதயத்தும் வரையினும்

நித்தலும் ஆடல் புரிவோன்

கன்மன அவுணர்கோன் கண்டிடப் பெருவடிவு

காட்டியே மறைத்த குரவன்,

கானினிடை வள்ளிமயில் தேனொடு தினைதரக்

காதலின் கண்ட கடவுள்

மன்னுசீர் இமையவர் வெஞ்சிறை வீட்டியே

வானரசாள வைத்தோன்,

வளமருவு சுரபதி மடமகள் தோள்தழுவு

வள்ளலாம் குமரவேளை,

முன்னரே அருளிய முதல்வியே கன்னியே

மூரல் நகைகாட்டி யருள்வாய்

முழங்கிடும் அளக்கர்சூழ் நீர்கொழும் பூரமர்

முதல்விமா காளி யுமையே

(7)

அளக்கருறு மகிதலம் முதலான யாவுமே

அன்னைநின் உருவ மாகும்,

அகன்றுவிரி வானாதி பூதங்கள் யாவுமுன்

ஆற்றலின் அமைதி பேசும்,

விளக்கமுறு பரிதியுன் தேசசின் பான்மையை

விரித்துமே விளக்கும் அலவோ!

விண்ணுலவு மதிதரும் வெண்ணிலவு பேரருள்

விந்தையை காட்டுமன்றோ!

உளக்குறும் பறுத்துயர் ஞானவரை ஏறியே

உன்னடி வழுத்து முரவோர்

உவந்துனை அழைத்தபோ தவர்கள்முன் ஓடிவந்

துயர்நடம் இயற்றி அருள்வாய்!

சளக்கிலா நெஞ்சினர் சால்புமிகு வைசியர்

தருமன் பின்வய மாகியே

சந்ததம் நீர்கொழும் பூரமர்ந் துவந்தனை

சண்டிமா காளி உமையே

(8)

சந்ததம் ஏத்திடும் அடியருங்க கருள்புரி

சாம்ப வ,ீ கல் யாணியே!

சார்ந்தவர் பக்குவந் தானறிந் தம்மையே

சகச மலமாதி களைவாய்!

பந்தமாம் உயிர்களின் உடனொன்றி வேண்டுநாள்

பாவ புண்ணியம் தணிப்பாய்

பாட்டினும் உரையினும் நவசத்தி எனவுனைப்

பாவலர் பரவி நிற்பார்

சுந்தரீ, மகேஸ்வரி, கௌமாரி, நாரணி,

துர்க்கைநீ, இந்தி ராணி

தோத்திரஞ் சொல்லியே ஏத்தினோம் வராகியே

தூயநல் வரங்கள் அருள்வாய்!

நந்துபல் வளமலி நீர்கொழும் பூரமர்

நாயகி, புவனேஸ்வரி,

நாவலர் நாவிலே நடநவில் தேவியே

நகுளிமா காளி யுமையே.

(9)

நாவலர் பரவிடும் தெய்வமே, அன்னையே,

நான்மறை தேடு பொருளே,

நஞ்சணி கண்டனொடு நடநவில் பூவையே

நாடரும் இன்ன மிர்தமே

தாவகல் வைகளைப் போதிலே அகமதில்

சாற்றுவெள் ளோதிமத்தில்

தகவுறு பிராமியாய்ச் சாதகர் கருதவே

தையல்நீ போந்தருளுவாய்!

மேவரும் நண்பகல் உச்சியில் அகமதில்

வெந்திறற் கலுழன் மிசையே

வித்தகி வைணவி என்னநீ வந்துமே

வறீறிருந் தருள்சுரப்பாய்,

சேவின்மிசை மாலையில் ரௌத்திரி ஆகியே

சிந்தைபோந் தருள்நல்குவாய்

தெண்டிரை மோதுகரை நீர்கொழும் பூரமர்

தேவிமா காளி உமையே.

(10)

வாழ்த்து

தெண்டிரை ஆடைபுனை செகமகள் அருணம்

செழித்துமே நாளும் வாழி

தீமைகள் பயந்திடும் அசுரகுணம் நீங்கியே

தெய்வகுணம் ஓங்கி வாழி

மண்ணவர் வாழ்வுயர வானமிழ் தளித்திடும்

மாமழை தானும் வாழி.

வந்துயர் பாற்பயன் தந்தெமைக் காத்திடும்

வான்பசுக் கூட்டம் வாழி

பண்ணமை தீந்தமிழ் மொழியினொடு சிவநெறி

படிமிசை நெடிது வாழி

பசிபிணி நீங்கியே மக்கள்குலம் நாளெலாம்.

பண்புடைமை காத்து வாழி

அண்ணலம் கடிநகர் நீர்கொழும் பூருறை

அன்பர்கள் இனிது வாழி

அம்பிகை திரிசூலி சிங்கமா காளிதன்

அணிமலர்ப் பதங்கள் வாழி.

யாதுமாகி நின்றாய் - காளி

எங்கும் நீநி றைந்தாய்;

தீது நன்மையெல்லாம் - காளி

தெய்வ லீலை யன்றோ?

பூதமைந்தும் ஆனாய் - காளி

பொறிக ளைந்தும் ஆனாய்;

போத மாகி நின்றாய் - காளி

பொறியை விஞ்சி நின்றாய்.

- பாரதியார்.